# நீர்வளத்துறை

## மானியக் கோரிக்கை எண். 40

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**திரு. துரைமுருகன்**
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்

**மாண்புமிகு கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலுடனும்**

**1. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்ட பகுதிகளில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளை குறைக்க ஏதுவாக நீர் வழித் தடங்களில் பருவமழைக்கு முந்தைய பராமரிப்பு பணிகள் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஓட்டேரி நல்லா, அரும்பாக்கம், விருகம்பாக்கம், ஆதம்பாக்கம், நாராயணபுரம் பக்கிங்காம் கால்வாய் ஆகிய நீர் வழி தடங்களில், குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மற்றும் கூவம், எண்ணூர், பழவேற்காடு, முட்டுக்காடு, அடையார் போன்ற முகத்துவாரங்களில், மணல் படிமானங்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பள்ளிக்கரணை, கீழ்க்கட்டளை, செம்பாக்கம்,

பெரும்பாக்கம், நாட்டு கால்வாய், பாப்பான் கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஓரத்தூர் ஓடை, ஆதனூர் கால்வாய், நீலி கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள செங்குன்றம் ஏரியில் போக்கு கால்வாய், அம்பத்தூர் கால்வாய், கொரட்டூர் கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள கெடிலம், உப்பானாறு, பெண்ணையாறு முகத்துவாரங்களில் மணல் படிமாங்களை அகற்றவும், வாலாஜா வாய்கால், வெள்ளப்பாக்கம் கால்வாய், செங்கால் ஓடை, தம்பிபேட்டை ஓடை, புலிகுத்தி ஓடை ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவங்களை அகற்றி வெள்ளத் தணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட பணிகளின் மொத்த மதிப்பு ரூபாய் 20 கோடி ஆகும்.

**2. சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அடையாறு உப வடிநிலத்தில் போரூர், கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பினை நிரந்தரமாக தடுக்க 6 வெள்ளத்தடுப்பு பணிகள் மூன்றாம் கட்டமாக ரூபாய் 88 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் தர்மராஜபுரம் பகுதியில் உள்ள கொளப்பாக்கம் கால்வாய் - II - ஐ அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் உள்ள மணப்பாக்கம் கால்வாயினை அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கெருகம்பாக்கம் கிராமத்தில் உள்ள கெருகம்பாக்கம் கால்வாயினை தொலைக்கல் 160 மீட்டர் முதல் 1500 மீட்டர் வரை மேம்படுத்தும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கெருகம்பாக்கம் கிராமத்தில் உள்ள கெருகம்பாக்கம் கால்வாயினை தொலைக்கல் 1500 மீட்டர் முதல் 2300 மீட்டர் வரை மேம்படுத்தும் பணி ரூபாய் 16 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தில் உள்ள கொளப்பாக்கம் கால்வாய்-1 யினை அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் – பொழிச்சலூர் சாலையில் கொளப்பாக்கம் கால்வாய்-I முதல் இணைப்பு ஓடை வரை "மூடிய வடிவிலான கால்வாய்" அமைக்கும் பணிகள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி குடிநீர் தேவைக்காக, சென்னை மாவட்டத்தில் கொசஸ்தலையாறு உப வடிநிலத்திற்கு உட்பட்ட மாதவரம் ரெட்டேரியை குடிநீர் ஆதாரமாக மாற்ற ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படும்.**

சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் கிராமம், மாதவரம் ரெட்டேரியினை ஆழப்படுத்துதல், நீர் ஒழுங்கி அமைத்து ஏரியை மேம்படுத்தி குடிநீர் ஆதாரமாக மாற்றும் பணி ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4. செங்கல்பட்டு, திருவள்ளூர் & சென்னை மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும், பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் நீண்ட கால அடிப்படையிலான 2 வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூபாய் 106 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் உள்ள ஒட்டியம்பாக்கம், பெரும்பாக்கம், காட்டூர், அம்பத்தூர், அயனபாக்கம், அயப்பாக்கம், பருத்திப்பட்டு, கொரட்டூர் ஆகிய இடங்களில் 8 ஏரிகளில் வெள்ளக் காலங்களுக்கு முன்பாக நீரினை வெளியேற்ற ஏதுவாக கலிங்குகளை நீக்கி நீரொழுங்கிகள் அமைத்து வெள்ளத் தணிப்பு பணிகள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை மாவட்டம், மாதவரம் மற்றும் அயனாவரம் வட்டங்களில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் வாய்க்காலில் "திறந்த மற்றும் மூடிய நீர் வழித்தடம்" அமைக்கும் பணிகள் ரூபாய் 94 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**5. கடலூர், திருச்சி, மயிலாடுதுறை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும், பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் நீண்ட கால அடிப்படையிலான 7 வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூபாய் 58 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், முருகன்குடி கிராமம் அருகே வெள்ளாற்றில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பழவார் ஓடை கரையினை பலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் நெடுகை 162.208 கி.மீ முதல் 162.454 கி.மீ வரை மற்றும் 162.800 கி.மீ முதல் 163.00 கி.மீ வரை வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 24 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள அன்பில் கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், வாத்தலை கிராமத்தில், தெற்கு கொள்ளிடத்தில், அமைந்துள்ள மேல் அணைக்கட்டில் நீர்போக்கி எண்.4 முதல் 6 வரை அமைக்கப்பட்டுள்ள காப்பு அணையை அகற்றும் பணி ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள நீர் சூழ்வதை தடுக்கும் வகையில் திருப்பணிகரிசல்குளம் வெள்ள நீரை, திருப்பி விடுதல் நெடுங்குளம், மேகமுடையார் குளம் வழியாக சத்திரம் புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பும் பணி ரூபாய் 3 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி ஒன்றியத்தில் உள்ள உலக்குடி குடியிருப்பு பகுதிக்கு அருகே உள்ள அத்திகுளம் வலது கிளை கால்வாயில் தற்போதுள்ள மதகுகளை மறுகட்டுமானம் செய்தல் மற்றும் வெள்ளத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பணிகள் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**6. அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருக்கும் பழைய இரும்புக் கதவுகளை புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். அதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் 17 அணைகளில் கதவுகள் மற்றும் அதனை இயக்க தேவையான இயந்திர பாகங்கள் மற்றும் மின்சார தொடர்பு சாதனங்கள் புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் ரூபாய் 34 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கார்குடி கிராமத்தில் உள்ள சித்தமல்லி நீர்த்தேக்கத்தில் வழிந்தோடி கதவுகள் மற்றும் நீர்ப்போக்கி எண் 1, 2 மற்றும் 3-ன் இயக்கு தளத்தை புனரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு பொருந்தலாறு அணையில் உள்ள வழித்தோடியின் செங்குத்து கதவுகள், ஆற்று மதகு கதவுகள் மற்றும் கால்வாய் கதவுகளை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் ஆண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள குதிரையாறு அணையின் வழிந்தோடியின் ஆரவடிவ கதவுகளை சீரமைத்தல் மற்றும் ஆற்று மதகு கதவுகளை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், மருதாநதி அணைக்கு மின் ஆக்கி மற்றும் மின்சாதன பொருட்கள் கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம் வடக்கநந்தல் கிராமம் கோமுகி அணையின் வழிந்தோடி எண் 1, 2 செங்குத்து கதவுகளை சீரமைக்கும் பணி ரூபாய் 12 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் கோனப்பட்டி கிராமம் சாத்தையாறு அணையில் மின் ஆக்கி மற்றும் கதவுகள் அமைக்கும் பணி ரூபாய்1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தமிழ்நாடு - கேரள எல்லையில் பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டத்திலுள்ள பரம்பிக்குளம் அணையின் வழிந்தோடியின் கதவு 1 மற்றும் 3 - ன் சங்கிலிகளை புதுப்பிக்கும் பணிகள் ரூபாய் 2 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஸ்ரீமூலபேரி நீர்த்தேக்கத்தில் கதவுகள் (SG Shutter) எண். 1, 2 மற்றும் 3 ஆகியவைகளை சீரமைத்தல் பணி ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் கருப்பாநதி அணையில் மின் ஆக்கி மற்றும் மின்சாதன பொருட்கள் கொள்முதல் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், அடவிநாயினார் கோயில் அணையில் உள்ள கரிசல் கால் அவசர கால கதவுகள், மின் சாதன வசதி மற்றும் கிரேன் (Gantry crane) புனரமைத்தல் பணிகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், அடவிநாயினார் கோயில் அணையில் உள்ள மேட்டுக் கால் அவசர கால கதவுகள், மின் சாதன வசதி மற்றும் கிரேன் (Gantry crane) புனரமைத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம் வைகை அணையில் உள்ள எடுப்பு அணையின் மதகிலுள்ள கதவுகளை கைமுறை இயக்குதலில் இருந்து மின் சாதன முறை இயக்கத்திற்கு மாற்றுதல் மற்றும் மின் ஆக்கி அறை கட்டும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், உப்பார் அணையின் இடது மற்றும் வலது கால்வாய் கதவுகளை புதுப்பித்தல் மற்றும் வழிந்தோடி கதவுகளுக்கு சிறப்பு சீரமைக்கும் பணிகள் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள அமராவதி அணையின் அமராவதி பிரதானக் கால்வாய்க் கதவுகள் எண் 2,3 அவசரகால கதவணை மற்றும் மண்அணையில் உள்ள மதகினை சிறப்பு சீரமைக்கும் பணி ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் மணிமுத்தாறு அணையின் பிரதான கால்வாயின் தலைமதகு மற்றும் அதன் கட்டுமானங்களை புதுப்பித்தல் மற்றும் பழுது பார்க்கும் பணிகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தில் கொடுமுடியாறு அணையிலுள்ள கதவுகளை புதுப்பிக்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம் பூண்டி கிராமம் சத்தியமூர்த்தி சாகர் நீர்தேக்கத்தின் வழிந்தோடி கதவுகளை சீரமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**7. கோயம்புத்தூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில், 15 இடங்களில், புதிய தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் ரூபாய் 70 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் வடக்கிபாளையம் கிராமம் கோவில் அறக்கட்டளை நிலத்திற்கு அருகில் க.ச.எண்.31/1A-ல் கோதவாடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், நரசிபுரம் கிராமம் பாச்சான்வயல் கால்வாயின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பொருளூர் கிராமத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூார் வட்டம், மல்வார்பட்டி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அனுக்கூர் கிராமத்தில், வேதநதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், விளாமுத்தூர் கிராமத்தில், மருதையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், இலாடபுரம் கிராமத்தில், நெடுகை 1.9 கி.மீ-ல் பொக்குனியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், லத்துவாடி கிராமத்தில், லத்துவாடி ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், புதுப்பட்டி கிராமத்தில், அய்யாறு ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், வளையப்பட்டி கிராமத்தில், தாழையார் வெளிப்போக்கி வாரியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், சின்னவேப்பம்பட்டு கிராமம் அருகில் கானாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் நகரம் அருகில் செய்யாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், படிஅக்ரஹாரம் கிராமம் அருகில் செய்யாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மேல்கொடுங்காலூர் கிராமம் அருகே, சுகநதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொன்னை கிராமத்திற்கும், பரமசாது கிராமத்திற்கும் இடையே பொன்னையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**8. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கிராமத்தில் கல்லுகுளம் வாரியில் ஒரு புதிய அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கிராமத்தில் அமைந்துள்ள தென்னங்காடு ஏரிக்கு நீர் வழங்க கல்லுக்குளம் வாரியின் குறுக்கே நெடுகை 1.85 கி.மீ-ல் ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் இதன் மூலம் 639.73 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**9. 22 மாவட்டங்களில், 123 கண்மாய்களில், பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் "செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு" (PMKSY-RRR) தலைப்பில் ரூபாய் 100 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்போடு, பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா, திட்டத்தின்கீழ், 2023-2024 ஆண்டில், பத்தாம் கட்டமாக (Phase X), வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், கரூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 22 மாவட்டங்களில் 123 ஏரிகள் மூலம் சுமார் 9661 ஹெக்டர் ஆயக்கட்டுகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 100 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**10. ஏழு மாவட்டங்களில் புதிய பெரிய பாசனத் திட்டங்களுக்கு ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

அமராவதி மற்றும் காவிரி ஆறுகள் இணையும் இடத்தில் வரும் உபரிநீரை நீரேற்றம் மூலம் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், திண்டுக்கல், நத்தம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள குளங்களுக்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு மண் பரிசோதனை, நில அளவை, மட்ட அளவை மற்றும் புவியியல் ஆய்வுகள் மேற்கொண்டு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் ஞாலம் கிராமத்தில் தடவையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு அறிக்கை (EIA) தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுதல் ஆகிய பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயிலிருந்து, வடபழஞ்சி கண்மாய் மற்றும் அதன் தொடர் கண்மாய்களுக்கு பாசன வசதி வழங்குவதற்கான ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், வாளையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டத்தில், காவிரி ஆற்றில் இருந்து நீரேற்ற முறையில் வெள்ள நீரை நாகையநல்ர் ஏரி மற்றும் பிற சாத்தியமுள்ள ஏரிகளுக்கு திருப்பும் பணிகளுக்கு ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், நாங்குநேரி பெரிய குளத்தின் கீழுள்ள 46 தொடர் குளங்களுக்கு பாசன நீர் வழங்கும் வகையில் நாங்குநேரியன் கால்வாயிலிருந்து புறக்கால்வாய் அமைத்தல் மற்றும் நாங்குநேரியன் கால்வாயை அகலப்படுத்திடும் திட்டத்திற்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுதல் உள்ளிட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 2 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், சடையங்குப்பம் மற்றும் இடையஞ்சாவடி கிராமங்களுக்கு இடையே கொசஸ்தலையாற்றின் குறுக்கே கடை மடை நீரொழுங்கி அமைப்பதற்கான ஆய்வு, மட்ட அளவை மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், அமுல்லைவாயல் மற்றும் சடையங்குப்பம் கிராமங்களில் புழல் ஏரியின் உபரி நீர்வாய்கால் நெடுகை 8.3 கி.மீ முதல் சடையங்குப்பம் கிராமத்தில் நெடுகை 13.30 கி.மீ வரை மேம்படுத்துவதற்கான ஆய்வு, மட்ட அளவை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான குடிநீர் இருப்பினை அதிகரிக்கும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் 4 இடங்களில் “ஆற்றுக்குள் நீர்தேக்கங்கள்” அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**11\. நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில், இரண்டு இடங்களில், கடல்நீர் உட்புகுதலைத் தடுக்கும் பொருட்டு கடைமடை கட்டமைப்புகள் உருவாக்கும் பணிகள் ரூபாய் 13 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் பறவையாறு வடிகாலின் குறுக்கே கடை மடை நீரொழுங்கி கட்டும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சோமநாதபட்டிணம் கிராமத்தில் முடியனாறு வடிகாலின் குறுக்கே நெடுகை 12.600 கி.மீட்டரில் கடைமடை நீரொழுங்கி கட்டும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**12. இரண்டு மாவட்டங்களில், 4 இடங்களில், சிறிய ஆறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே பாலங்கள் / தரைப்பாலங்கள் கரைகளில் சாலை, நடைபாதை அமைக்கும் பணிகள் ரூபாய் 49 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டத்தில் பனப்பள்ளம் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் மற்றும் காரப்பட்டி வாய்க்காலில் சரகம் 4.120 கி.மீ-ல் உள்ள நீர்வழிப் பாலத்தில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் ஆகியவை ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரத்தில் தாழையாத்தம் முதல் சேம்பள்ளி சாலை வரை கௌண்டன்ய மகாநதி வலது ஆற்றங்கரை மேல் சாலை அமைக்கும் பணி ரூபாய் 30 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரம், கங்கையம்மன் கோயில் அருகே மகாநதி ஆற்றின் குறுக்கே நீர்போக்கிகளுடன் கூடிய தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 14.00 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரத்தில் கௌண்டன்ய மகாநதி இடது ஆற்றங்கரை மேல் நடைபயிற்சி மேற்கொள்ள வசதியாக நடைபாதை அமைக்கும் பணி ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**13. 8135.48 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகள் பயன்பெறும் விதமாக பாசன நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக 2 மாவட்டங்களில் 3 புதிய கால்வாய்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 12 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

தென்காசி மாவட்டம், கருப்பாநதி பாப்பான் கால் பாசனம், கள்ளம்புளி குளம் வரத்துக்கால்வாயிலிருந்து குலையநேரி குளம் வரத்துக் கால்வாய்க்கு புறவழிக்கால் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டதில் உள்ள நிலையூர்-கம்பிக்குடி நீட்டிப்பு கால்வாய் திட்டத்தின் மூலம் பயன்பெறக்கூடிய 18 கண்மாய்களுக்கு நீர் வழங்குவதற்கு வரத்துக்காலினை அகலப்படுத்துதல் மற்றும் உருவாக்குதல் திட்டப்பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி கிராமம், கோல்வார்பட்டி நீர்தேக்கத்திலிருந்து, கோல்வார்பட்டி பெரிய கண்மாய்க்கு கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**14. சென்னை மண்டலத்தில் வேலூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் பாசன அமைப்புகளில் புனரமைப்பு, கட்டுமானம் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் 13 பணிகள் ரூபாய் 129 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சக்திவிளாகம் கிராமம் வெள்ளாற்றின் வலது கரையில் நெடுகை 1.683 கிமீ முதல் 1.770 கிமீ வரை பாதுகாப்புச்சுவர் அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கழுதைவெட்டி வடிகாலினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் அமைந்துள்ள அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயம் முன்பு செல்லும் மணிமுக்தா ஆற்றின் வலது கரையில் பாதிக்கப்பட்ட பகுதியில் படித்துறை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் புத்தானேந்தல் அணைக்கட்டு நீர்போக்கியினை சீர்செய்தல் மற்றும் அணைக்கட்டிலிருந்து 6 ஏரிகளுக்குச் செல்லும் வாய்க்கால்களை பராமரிக்கும் பணி ரூபாய் 82 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் கிராமத்தில் உள்ள வாலேரியின் உபரிநீரினை கொரட்டி ஏரிக்கு கொண்டுசெல்ல கான்கிரீட் குழாய் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், போரா கானாற்றினை வெள்ளக்குட்டை கிராமம் முதல் எறாக்குட்டை ஏரி வரை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், R.K பேட் தாலுகா, வெடியன்காடு கிராமத்திலுள்ள வெடியன்காடு ஏரியினை புனரமைத்து, புதிய இணைப்புக் கால்வாய் ஏற்படுத்தும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள காங்குப்பம் கிராமத்தில் உள்ள மோர்தானா அணையின் இடது பிரதான வாய்க்காலின் தொலைக்கல் 20150 மீட்டர் முதல் 20450 மீட்டர் வரை நீர் ஊடுருவல் தடுக்கும் அமைப்புடன் கூடிய அகவுரை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் காங்கேயநல்லூர் கிராமம் முதல் பாலாற்றில் இணையும்வரை பாண்டியன்மடுவு கால்வாயினை புனரமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் வட்டம் கவசம்பட்டு கொட்டாற்றினை மேலூர் கிராமம் முதல் பாலாற்றில் கலக்கும் திருமணி கிராமம் வரை புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், வீரபாண்டி கிராமத்தில் உள்ள வீரபாண்டி ஏரியினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், அய்யன்கோயில்பட்டு கிராமம் பம்பையாற்றின் குறுக்கே அமைந்துள்ள வாதானூர் நீர் ஒழுங்கியினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணை நல்லூர் வட்டம், ஏனாதி மங்கலம் கிராமத்தில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே அமைந்துள்ள எல்லீஸ் அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 86 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**15. திருச்சி மண்டலத்தில் நாகப்பட்டினம், சேலம், கரூர், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பாசனக் அமைப்புகளில் புனரமைப்பு, மறு சீரமைப்பு மற்றும் மறு கட்டுமானம் செய்யும் 12 பணிகள் ரூபாய் 58 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கால்வாயின் நெடுகை 0 கி.மீ முதல் 18.50 கிமீ வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 8 கோடியே மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நங்கம் தோகைக்கரை கால்வாயினை புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும்பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், தெற்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் தெற்கு பொய்கைநல்லூர் வடிகால் இயக்கு அணை 1 மற்றும் 2-ன் மறுகட்டுமானப் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமத்தில் காட்டுப்புதூர் ஊட்டு வாய்க்காலினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 11 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஓகலூர் மற்றும் வடக்கலூர் வழங்கு கால்வாய்களின் குறுக்கே அமைந்துள்ள பகிரணையினை மறு கட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சின்னாறு உப வடிநில கண்மாய் தொகுப்பின் கீழ் உள்ள கலிங்குகள் மற்றும் மடைகளைப் புதுப்பித்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஆயக்குடி கிராமத்தில் உள்ள ஆயிக்குடி கண்மாயின் கலிங்கு மற்றும் மடையினைப் புதுப்பித்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணையில் எல்லீஸ் சேடல் 16 கண் மதகின் வெள்ள நீர்ப்போக்கி எண். 1 முதல் 16 வரை உள்ள வீழ்நீர் தாங்கு தளம் (ஏப்ரான்) மறுசீரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், நாட்டானிக்கோட்டை கிராமத்தில், பூனைக்குத்தியாறு ஆற்றின் குறுக்கே நெடுகை 10.30 கி.மீ-ல் அமைந்துள்ள பூனைக்குத்தியாறு அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், சேவலூர் கிராமத்தில் உள்ள மணப்பாறை குளம் வழங்கு வாய்க்கால் மற்றும் உபரி நீர் கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், சித்தநத்தம் கிராமத்தில் உள்ள சேந்தன்குளம் அணைக்கட்டு மற்றும் சித்தநத்தம் அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், நகர் கிராமத்தில் மேல் பங்குனி வாய்காலின் குறுக்கே உள்ள இடைநிலை நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**16. கோயம்புத்தூர் மண்டலத்தில் திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் பாசன அமைப்புகளில் புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறுகட்டுமானம் செய்யும் 8 பணிகள் ரூபாய் 39 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், மதவ இராயபுரம் கிராமம் நொய்யல் ஆற்றில் ராயர் கோயில் பாலத்தின் மேற்புறம் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் கிராமம் க.ச.எண்.3-ல் உள்ள பள்ளத்தின் குறுக்கே உள்ள தடுப்பணையினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனை மலை வட்டத்தில் உள்ள சம மட்ட கால்வாய் சரகம் 9.4 கீ.மீ. முதல் 9.6 கீ.மீ. வரை மற்றும் சரகம் 10.05 கீ.மீ. முதல் 10.25 கீ-மீ. வரை உள்ள பகுதிகளில் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில், ஆத்தூர் அணைக்கட்டு வரத்து வாய்க்காலில் சின்னகன்னிமார் கோவில் முதல் சொக்கு பிள்ளை ஓடை மதகு வரை வாய்க்கால் சீரமைத்தல் பணிகள் ரூபாய் 9 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூர் கிராமத்தில் பகடைக்குளத்தின் உபரி நீர் கலிங்கு புணரமைத்தல், பகடைக்குளம் மற்றும் பில்வெட்டிகுளங்களில் உள்ள மதகுகளை புதுப்பிக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ரங்கன்பள்ளம் கசிவுநீர் திட்ட கால்வாய் சரகம் 0 மீட்டர் முதல் கடைமடை வரை புனரமைக்கும் பணி ரூபாய் 84 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், அமராவதி ஆற்றின் இடது கரை வாய்க்கால் சரகம் 27.050 கி.மீ முதல் 30.000 கி.மீ வரை புனரமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், அமராவதி ஆற்றின் வலது கரை வாய்க்கால் சரகம் 7.300 கி.மீ முதல் 9.900 கி.மீ வரை புனரமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**17. மதுரை மண்டலத்தில் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, திண்டுக்கல், கன்னியாகுமரி, இராமநாதபுரம், விருதுநகர், தென்காசி ஆகிய மாவட்டங்களில் பாசனக் அமைப்புகளில் புனரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் மறு கட்டுமானம் செய்யும் 16 பணிகள் ரூபாய் 58 கோடியே 41 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நிலக்கோட்டை கிராமம், கொங்கர்குளம் மற்றும் நூத்துலாபுரம் கிராமம், பாப்பன்குளம் கண்மாய்களுக்கு செங்கட்டான்குளம் கண்மாய் உபரிநீர் வழங்கும் பகிர்மான அணை மறுகட்டுமானம் மற்றும் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமம், குண்டம்பாச்சி கண்மாயை புனரமைக்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், பனங்காடி கிராமம், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட கீழப்பனங்காடி கண்மாய் வழங்கு வாய்க்காலை நிரந்தரமாக புனரமைக்கும் மற்றும் புதுப்பிக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் மற்றும் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம்,புதூர் கிராமம் முதல் புலிமான்கோம்பை வரை 58 கிராம பிரதான கால்வாயினை மேம்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் கூத்தன்கால்வாயிலுள்ள வழங்கு வாய்கால்கள் மற்றும் தலைமதகுகளை சீரமைக்கும் பணி ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், நாட்டாறு கால்வாயில் தலை மதகுகள், மணல் போக்கி, சுரங்கவழி கால்வாய், கட்டுதல் மற்றும் நாட்டாறு கால்வாய் சீரமைத்தல், நாட்டாறு கால்வாய் மூலம் பாசனம் பெறும் மானாமதுரை வட்டத்திலுள்ள 17 கண்மாய்கள், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்திலுள்ள 3 கண்மாய்கள், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டத்திலுள்ள 1 கண்மாய் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் கிராமத்தில் நிஷபநதி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள இலாங்குளம் அணைக்கட்டில் ஒரு தலைமதகு அமைக்கும் பணிரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம் மற்றும் கிராமத்தில் மானூர் கால்வாயின் தலை மதகில் கூடுதல் திறப்பு அமைக்கும் பணி மற்றும் மானூர் கால்வாயை செம்புலி பட்டணம் முதல் துத்திக்குளம் வரை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், வடக்கு அரியநாயகிபுரம் கிராமத்தில் கோடகன் கால்வாயின் குறுக்கே நெடுகை 1.95 கி.மீட்டரில் அமைந்துள்ள பாலம், நெடுகை 1.85 கி.மீ மற்றும் 2.41 கி.மீட்டரில் அமைந்துள்ள நடைபாதை பாலங்களை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், தாமிரபரணி பாசன அமைப்பில் வடக்கு பிரதான கால்வாயின் கீழ் உள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் கிளை கால்வாய்களை புதுப்பித்தல் மற்றும் வெள்ளத்தணிப்பு பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், தாமிரபரணி அமைப்பின் கீழ் உள்ள ஆத்தூர் கால்வாயினை புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், கால்வாய் சடையனேரி வாய்க்காலினை மேம்படுத்தி புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், பேரூரணி அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி 5 இலட்சம் மதிப்பீட்டிலும்

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சாம்பன்குளம் ஏரியின் வழங்கு வாய்க்காலின் இடது கரையில் பாதுகாப்பு பணிகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், வடக்கு கல்மேடு கண்மாயினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆவுடையார்குளம் ஏரியிலும் மற்றும் அதன் உபரி நீர் கால்வாயிலும் வெள்ளத் தடுப்பு பணிகள் ரூபாய் 8.00 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**18. வெள்ள நீர் மேலாண்மையை மேம்படுத்தும் விதமாக சென்னையில் உள்ள செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம், நீர்த்தேக்கங்களில் உள்ள வெள்ளக் கதவுகளின் இயக்கம் சிறப்பு மென் பொருள் உதவியுடன் தானியங்கி மயமாக்கப்படும். இப்பணி ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

சென்னையில் உள்ள செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து போன்ற நிகழ்நேர நீரியல் தரவுகள் உணர் கருவிகள் மற்றும் செயற்கைக் கோள்கள் மூலம் சிறப்பு மென் பொருட்கள் உதவியுடன் ஒரு ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் சேகரிக்கப்பட்டு, கணினி வழி பகுப்பாய்வு செய்யப்படும். இதனடிப்படையில் இந்நீர்தேக்கங்களில் உள்ள உபரி நீர் கதவுகளின் இயக்கம் தானியங்கி மயமாக்கப்படும். இதனால் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அதீத மற்றும்

நிச்சயமற்ற வெள்ள இடர்பாடுகளை சிறப்பாக கையாண்டு வெள்ள நீர் மேலாண்மையை மேம்படுத்த இயலும். இது தொடர்பாக தேவைப்படும் கட்டுமானம், நவீன உபகரணங்கள் மற்றும் மென் பொருள் உருவாக்கம் முதலிய பணிகள் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**திரு. துரைமுருகன்**
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.